விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 229 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 20 வெள்ளிக்கிழமை (05.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை


T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## பேருந்து கட்டணங்கள் குறைப்பு

(கொழும்பு)
பேருந்து கட்டணங்கள் நள்ளிரவுமுதல் குறைக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
அண் மையில்

11

## இலங்கையின் பொருளாதார அரசியல் நிலைமைகள் தொடர்பில்



### அமெரிக்கா, இந்தியா உயர்மட்ட கலந்துரையாடல்

(புனோம் பென்)
இலங்கையின் தற்போதைய பொருளாதார அரசியல் நிலைமைகள் தொடர்பில்

11

## தனியார் பேருந்துகள்
### சேவையிலிருந்து விலகத் தீர்மானம்

(கொழும்பு)
QR முறையின் கீழ் வழங்கப்படும் டீசல் போதுமானதாக இல்லை என்ற காரணத்தினால், நள்

11

## QR குறியீட்டை பாதுகாப்பாக வையுங்கள்
### எரிசக்தி அமைச்சர்

(கொழும்பு)
தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்துபவர்கள் QR

11

### உலகளாவிய ரீதியில் பதற்றத்தை அதிகரிக்கும்
# ஆத்திரமூட்டல்களை தவிர்க்க வேண்டும்
### சீனத் தூதுவரிடம் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)
உலகளாவிய ரீதியில் பதற்றங்களை அதிகரிக்கும் ஆத்திரமூட்டல்களை நாடுகள் தவிர்க்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனத் தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சீனத் தூதுவர் சீ சென் ஹொங்குக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கி

11



## யாழில் நாயை வெட்டிக்கொன்று
### வீடியோ எடுத்த இருவர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் நாய் ஒன்றை கைக்கோடரியால் வெட்டிக் கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
மேலும்

11



### பாராளுமன்றத்தை அரசாக மாற்றி
## நாட்டைக் கட்டியெழுப்புவதே சர்வகட்சி அரசின் நோக்கம்
### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)
பாராளுமன்றத்தை அரசாங்கமாக மாற்றி, நாட்டைக் கட்டியெழுப்பும் தீர்மானங்களை எடுப்பதே சர்வகட்சி அரசாங்கத்தின் நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது குறித்து, ஸ்ரீலங்கா சுதந்திரக்

11

## அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவடைகின்றன
### புறக்கோட்டை வர்த்தக சங்கம்

(கொழும்பு)
நாட்டில் பருப்பு, சீனி, கிழங்கு, வெங்காயம், மிளகாய் போன்ற அத்தியாவசிய உணவுப்பொருட்களின்விலைகள் கணிசமாக குறைவடைந்துள்ளதாக புறக் கோட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.
இதற்கமைவாக 600 ரூபாயாக இருந்த பருப்பு மொத்த விலை 410 ரூபாயாகவும் 330 ரூபாயாக இருந்த சீனியின்


11

### 9 தமிழ்க் கட்சிகள்
## சர்வகட்சி அரசை ஸ்தாபிப்பதற்கு ஆதரவு

(கொழும்பு)
9ஆவது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 9 தமிழ்க் கட்சிகளும் 4 முஸ்லிம் கட்சிகளும் சர்வகட்சி அரசொன்றை ஸ்தாபிப்பதற்கு ஆதரவை வெளியிட்டுள்ளன.
கஜேந்திரகுமார் பொன்னம்பலம்தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு மட்டுமே இன்னும் வெளியாக

12

## மக்களை நசுக்குவதற்கு பதிலாக ஜனநாயகத்தை நிலைநாட்டுங்கள்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)
அடக்குமுறை கொடுங்கோல் செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட்டு ஜனநாயகத்தை அனுபவிக்கும் சிறப்புரிமைகளை இந்நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள் விடுத்தார்.
கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் எதிர்க்


12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## சண்முகம் விஸ்வநாதர் முருகேசு



S.V.M என்ற மூன்றெழுத்தால் எவ்வுலகிலும்
அறியப்பெற்ற ஏந்தலே!
ஆண்டுகள் பன்னிரண்டு ஆனாலும்
ஐயா! உங்கள் நினைவிலேயே நாமின்றும்!

தமிழினத்தின் அடையாளமாய்
காரைநகரின் நிமிர்வாய்
வர்த்தக உலகில் வைரமாய்
அற உலகின் ஆணி வேராய்
ஆன்மீக உலகின் காவலனாய்
உழைப்பில் ஓங்கிய வடிவமாய்
யாழ்ப்பாணத்தின் பொருளாதார அடையாளமாக
விளங்கியதே S.V.M என்ற மூன்றெழுத்தே!

வளமோங்க வாழ வழிசெய்த
வள்ளலே உங்கள் வழிநிற்போம்!

குடும்பத்தினர்

(12357)

தோற்றம்
23.12.1923

மறைவு
16.08.2010

உரிமையாளர், பணியாளர்கள்

S.V.M (PVT) LTD - 122, Damstreet, Colombo-12.
SVMURUGESU- 154, Hospital Road, Jaffna
SVMURUGESU ( PVT) LTD - 106, Hospital Road, Jaffna
S.V.M. DISTRIBUTORS ( PVT) LTD - 160, Standely Road, Jaffna
SVM FUEL MART - 173, 175, Palaly Road, Thirunelvely, Jaffna.
S.V.M. ENTERPRISE (PVT) LTD - 288, A9 Road, Karadipokku, Killinochi

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

## மணிவண்ணன் லக்சிகா

**திதி : நவமி – 05.08.2022**

அன்னை மடியில்
21.12.2004

அம்பாள் அடியில்
28.07.2020





அம்மன் வடிவானவளே!
அன்பு மகள் லக்சியம்மா!
ஆண்டு இரண்டு ஆனதம்மா
ஈரவிழிகள் காயவில்லையம்மா
ஆண்டு தோறும் அழுகின்றோம்
ஆலயத்தில் காண்கின்றோம்
அள்ளி அணைக்க நினைக்கின்றோம்
ஆனாலும் முடியவில்லையம்மா!
இது என்ன காலம் என்று
கலங்கி நிற்கிறோமம்மா உன்நினைவால்!

(12353)

என்றும் உம் ஆத்மா அமைதி அடைய
எல்லாம் வல்ல துர்க்காதேவி பாதங்களை
வேண்டி நிற்கின்றோம்.!

க. மணிவண்ணன்,
துர்க்கா ஸ்ரோர்ஸ்,
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.
077 614 1764

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோசப் ஸ்டாலினின் கைதை கண்டித்து அதிபர், ஆசிரியர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டதை கண்டித்தும் அவரின் உடனடி விடுதலையை வலியுறுத்தியும் யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகளின் முன்பாகப் பரவலாக அதிபர், ஆசிரியர்கள் நேற்று வியாழக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை இடைவேளை நேரமான நேற்று முற்பகல் 10.30 மணியளவில் சம நேரத்தில் மேற்படி கவனயீர்ப்புப் போராட்டங்கள் இடம் பெற்றன.

குறித்த கவனயீர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்ட அதிபர், ஆசிரியர்கள் ஜோசப் ஸ்டாலினின் கைதைக் கண்டிக்கும் பல்வேறு சுலோகங்களைத் தமது கைகளில் ஏந்திக் கவனயீர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கடந்த மே மாதம் 28 ஆம் திகதி நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வவுனியாவிலும் இவ்வாறான போராட்டங்கள் இடம்பெற்றன.(4-18-33-64-299)

# வல்வை பாலத்தில் மோ.சைக்கிள்-கார் விபத்து

## ஒருவர் காயம்


(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வல்லைப் பாலத்தில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற மோட்டார்சைக்கிள்- கார் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழில் பெய்து வரும் மழை காரணமாக குறித்த பாலத்தில் வழுக்கும் தன்மை காணப்பட்டமையால் பாலத்தில் பயணித்த கார் வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிரே மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மீது மோதியதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

விபத்தினை ஏற்படுத்திய கார் பாலத்திலிருந்து விழுந்த போதிலும் சாரதி காயங்கள் எதுவுமின்றித் தப்பியுள்ளார்.

இதேவேளை, யாழ். வல்லை மற்றும் கோப்பாய் பாலங்கள்



இரும்பில் அமைக்கப்பட்டுள்ளமையால் மழைக்காலங்களில் குறித்த இரு பாலங்களிலும் அதிகளவான விபத்துச் சம்பவங்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே, விபத்துச் சம்பவங்களை தடுப்பதற்கு ஏதுவான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-18-33)

## எரிபொருள் விநியோகிப்பதில்

# மதகுருமார்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு ஜனாதிபதிக்கு கடிதம்

(குப்பிழான்)

மத குருமார்களிற்கு QR முறைமை மூலம் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்குமாறு கோரி வலி.தெற்குப் பிரதேச சபையின் ஐக்கியதேசிய கட்சி உறுப்பினரும் இளம் சமூக சேவகருமான பா. சுரேஷ்குமார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர மற்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் ஆகியோருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வணக்கத்திற்குரிய இந்து குருமார்கள், அருட்தந்தையர்கள், மௌலவிகள், பௌத்த துறவிகள் போன்றவர்களை மதித்து மரியாதையுடன் நடத்துவது எமது கடமையாகும்.

எனவே, தயவுசெய்து எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இவர்களை வரிசையில் காத்து நிற்கவிடாது முன்னுரிமை அடிப்படையில் QR முறைமை மூலம் விரைவாக எரிபொருட்களை வழங்கி மதக் கடமைகளையும் சமய அனுட்டானங்களையும் மேற்கொள்வதற்கு உதவி புரியுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன் எனவும் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த கடிதத்தின் பிரதி வடமாகாணப் பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பொது முகாமையாளர் சிவதர்சனுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-18)

# ஆலயத்தின் ஐம்பொன் தகடு திருட்டு

(கரணவாய்)

கப்பூது வீரகத்தி பிள்ளையார் ஆலயத்தில் மூல விக்கிரகம் புரட்டப்பட்டு அதற்குள் இருந்த ஐம்பொன் தகடு திருடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஆலயத்தின் மாலை நேர பூசை முடிந்ததையடுத்து ஆலயத்தை பூட்டி விட்டுச் சென்ற பூசகர் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை ஆலயத்தை திறக்க சென்ற போது மூல விக்கிரகம் புரட்டப்பட்டு அதற்குள் இருந்த ஐம்பொன் தகடு திருடப் பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (4-60)

## கிராம உத்தியோகத்தரின்

# பிறந்தநாள் பரிசாக பெற்றோல் வழங்கிய மக்கள்

(குப்பிழான்)

யாழில் கிராம உத்தியோகத்தரின் பிறந்த நாளுக்கு ஊர்ப் பொதுமக்கள் இணைந்து பெற்றோலைப் பரிசாக வழங்கிய சம்பவமொன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

ஜே/363 கிராம உத்தியோகத்தரின் பிறந்தநாள் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற போதே இவ்வாறு பெற்றோல் பிறந்தநாள் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி கிராம உத்தியோகத்தரின் பணிகளை இடையூறின்றி மேற்கொள்ளும் பொருட்டே பிறந்தநாளில் பெற்றோல் வழங்கி வைக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (4-18)

## பெண்ணின் சங்கிலி அறுப்பு சந்தேக நபர்கள் இருவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில் நேற்று முன்தினம் மாலை வீதியால் சென்ற பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்ற இரண்டு சந்தேக நபர்கள் தருமபுர பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.(4-316)

# வட்டு.பொலிஸ் நிலையத்திற்கு புதிய பொறுப்பதிகாரி நியமனம்



(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக டபிள்யூ.டி.பி.டி கொஸ்தா நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே கடமையாற்றிய பொறுப்பதிகாரி சமன் குணதிலக 7 ஆண்டுகள் பணியாற்றி, கடந்த மாதம் இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து பிரதம பொலிஸ் பரிசோதகர் கொஸ்தா இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார். (4-33-104)

# நகர அபிவிருத்தி அதிகார சபையினரால் வடக்கில் பொதுமக்கள் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாண காரியாலயத்தின் ஏற்பாட்டில் பொதுமக்கள் நடமாடும் சேவை ஒன்று நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகாண பிரதிப் பணிப்பாளர் திருமதி. கவிதா ஜீவகன் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குரிய தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்காக பொதுமக்கள் நடமாடும் சேவையானது இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது. முதல் கட்டமாக யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கியதாக நடத்த எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நகர விருத்தி அதிகார சபையின் வடமாகாண காரியாலயத்தில் முதலாம் மாடியில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக வவுனியா மாவட்டம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக வவுனியா கலாசாரம் மண்டபத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டு பொதுமக்கள் நடமாடும் சேவையும் காலை 8:30 மணி தொடக்கம் பிற்பகல் 2:30 மணி வரை நடைபெறவுள்ளது. குறித்த நடமாடும் சேவையில் நகர விருத்தி பிரதேசமாக பிரகடனப்படுத்த அதாவது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நகரஅபிவிருத்தி பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதியில் உள்ள தங்களது திட்டமிடல் அனுமதிகள் தொடர்பான பிரச்சினைகள் அதாவது கட்டட கட்டுமானம், காணி தொடர்பான பிரச்சினைகள் அங்கீகாரமற்ற கட்டடங்கள் மேலும் வேறு கட்டட அனுமதிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் நடமாடும் சேவையில் பெற்றுக் கொடுக்கப்படும்.

எனவே, குறித்த நடமாடும் சேவையில் பயன்பெற விரும்பும் பொதுமக்கள் குறித்த நடமாடும் சேவையில் பங்கு பற்ற முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (4-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயர்லாந்து அணிக்கெதிரான முதலாவது இருபது-20

## தென்னாபிரிக்கா வெற்றி



அயர்லாந்து கிரிக்கெட் அணிக்கெதிரான முதலா வது இருபது-20 போட்டியில், தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் 1-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா அணி, முன்னிலை பெற்றுள்ளது.

பிரிஸ்டோல் மைதானத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்ற இப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 211 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிக பட்ச ஓட்டங்களாக, ரீஸா ஹென்றிக்ஸ் 74 ஓட்டங்களையும் எய்டன் மார்கிரம் 56 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

அயர்லாந்துக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், டெலானி 2 விக்கெட்டுகளையும் எண்டி மெக்பிரைன் மற்றும் ஜோசுவா லிட்டில் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 212 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய அயர்லாந்துக் கிரிக்கெட் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 190 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந் தது. இதனால், தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, டக்கர் 78 ஓட்டங்களையும் ஜோர்ஜ் டொக்ரெல் 43 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், கேசவ் மஹாராஜ், வெய்ன் பார்னல் மற்றும் டப்ரைஸ் சம்ஸி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் லுங்கிங்கிடி மற்றும்டுவைன் பிரிடோரியஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 53 பந்துகளில் ஒரு சிக்ஸர் 10 பவுண்ரிகள் அடங்கலாக, 74 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ரீஸா ஹென்றிக்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (4)

# இருபது-20 போட்டியில்

## ஹர்திக் பாண்ட்யா சாதனை



இருபது-20 கிரிக்கெட்டில் 800 ஓட்டங்களுடன் 50 விக்கெட்டுகள் வீழ்த்திய முதல் இந்திய வீரர் என்ற சாதனையை ஹர்திக் பாண்ட்யா படைத்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான மூன்றாவது இருபது-20 போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் இந்திய அணியில் ஆல்ரவுண்டர் வீரர் ஹர்திக் பாண்ட்யா ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இதன்மூலம் இருப்பது-20 கிரிக்கெட்டில் 800 ஓட்டங்கள் மற்றும் 50 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இந்திய வீரர் என்ற பிரம்மாண்ட சாதனையை அவர் படைத்தார்.

சர்வதேச அளவில் இந்த மைல்கல்லை எட்டிய 9ஆவது வீரர் ஹர்திக் பாண்ட்யா ஆவார். 66 போட்டிகளில் 806 ஓட்டங்கள் எடுத்துள்ள ஹர்திக் பாண்ட்யா, 50 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளனர். அவரது சிறந்த பந்துவீச்சு 4/33 ஆகும். (4)


**சிவகாமியின் செல்வர்**
**உயர்திரு. முருகன் இளையதம்பி**
**அவர்களின்**
**திருவுருவச் சிலை திறப்பு விழா**

இடம் : வளர்மதி சனசமூக நிலைய முன்றல்
காலம் : 05.08.2022 வெள்ளிக்கிழமை
நேரம் : மாலை 5.00 மணி

வரவேற்புரை
திருமதி பிரதீபன் சரண்யா
National Diploma in Teaching B.Ed Honours Degree(Reading)

தலைமை
திரு.சன்னதி தயாளன் (BSc,DET-UK) Director of LIM Education (UK)

திருவுருவச் சிலை திறப்பு
திரு.ஈ.தயாரூபன் (கரவெட்டி பிரதேச செயலர்)

திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிதல்
திருமதி இளையதம்பி யோகம்மா (உயர்திரு. மு.இளையதம்பி அவர்களின் பாரியார்)

ஆசியுரை
திரு.தி.பிரகலாத குருக்கள் (நவிண்டில் சிவகாமி அம்மன் ஆலயம்)

சிறப்பு விருந்தினர்கள்
R.M.S.A.Padmasiri (வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி)
திரு.ம.மனோகர் (சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ். பல்கலை)
திரு.து.இராமஜெயம் (உயர் தொழில்நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்)
திரு.கே.ரீ.சிறிஸ்காந்தசிங்கம் (நில அளவையாளர், நவிண்டில்)
திரு.க.பொன்னையா (உப தவிசாளர், கரவெட்டி பிரதேச சபை, வடமராட்சி தெற்கு,மேற்கு)
திரு.M.அபிராம் (கிராம அலுவலர், கரணவாய் மத்தி)
திருமதி லக்ஷ்மன் தனுஜா (கிராம அலுவலர், கரணவாய் வடமேற்கு)
DR.க.வேலும்மயிலும் (சமாதான நீதவான்)
திரு.ஆ.இரத்தினசிங்கம் (தலைவர் நாச்சிமார் ஆலயம்)
திரு.கு.சத்தியசீலன் (தலைவர், கலைமதி ச.ச.நி)
திரு.சி.செல்லச்சாமி (ஜோதிடர்)
திரு.நா.சுரேஸ் (தலைவர், நவிண்டில் பெரியஞ்சீமா ஞானவைரவர்)
திரு.இ.சிவலோகம் (தலைவர், நவிண்டில் சிவகாமி அம்மன் ஆலயம்)
திரு.ந.தவராஜா (முன்னாள் தலைவர், வளர்மதி ச.ச.நி)
திரு.மா.லோகசிங்கம் பொருளியல் ஆசான் (வளர்மதி சமூக மேம்பாட்டு அபிவிருத்திக் குழு)

நன்றியுரை
திரு.ந.நவீந்திரன் (செயலாளர் - வளர்மதி ச.ச.நி) (C-4708)

விழா ஏற்பாட்டாளர்கள் - வளர்மதி ச.ச.நிலையம்
வளர்மதி சமூக மேம்பாட்டு அபிவிருத்திக் குழு



**6 ஆம் ஆண்டு**
**நினைவஞ்சலி**



மண்ணில் 1949 - 08 - 13
விண்ணில் 2016 - 08 - 11

அமரர்
**சபாரத்தினம் தர்மரத்தினம் (CTB)**
(ஓய்வுபெற்ற சிரேஷ்ட சாலைப் பரிசோதகர் - பருத்தித்துறை சாலை)

ஆண்டுகள் ஆறு கடந்தாலும்
என்றும் எங்கள் நினைவுகளில் வாழும் பப்பாவே
எங்கள் உயர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்து
சமூகத்தில் பொதுச் சேவையின் பங்காளனாக
எங்களை உருவாக்கியவரே!
அவனியில் உங்களின் வாரிசுகள்
என்ற அந்தஸ்த்தை எமக்கு அளித்தவரே!
எங்கள் நெஞ்சிருக்கும்வரை உங்கள் நினைவிருக்கும்.
உங்கள் ஆத்மா ஆலடி பாலகணபதியின் பாதங்களில்
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள்
வி.செந்தூரன், வி.குமரன், வி.துவாரகன்
(C-4709)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டக்காரர்களை அச்சுறுத்த அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தும் அரசு

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வலியுறுத்தி போராட்டங்களில் ஈடுபடுவோரை துன்புறுத்துவதற்கும் தன்னிச்சையாக கைது செய்து தடுத்து வைப்பதற்கும் இலங்கை அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்துவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

ஆர்ப்பாட்டக்காரர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பத்திரிகையாளர்களை மிரட்டுதல், கண்காணித்தல் மற்றும் தன்னிச்சையாக கைது செய்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் அரசுக்கு எதிரான போராட்டங்களை தடுக்க முயற்சிகள் இடம்பெறுவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதிப் போராட்டக்காரர்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் அடக்குமுறையானது, நாட்டின் அவசர பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண வேண்டிய அவசியத்திலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும் தவறான மற்றும் சட்ட விரோத முயற்சியாகத் தோன்றுகிறது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மனித உரிமைகளை மதிக்கும் அரச நிர்வாகத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பதில் இலங்கையின் சர்வதேச பங்காளிகள் தெளிவாக இருக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச தரத்திற்கு முரணான அவசரகாலச் சட்டத்தின் விதிகள் உடனடியாக இரத்து செய்யப்பட வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (நி)

# பொருளாதார அபிவிருத்திக் குழு தலைவராக தம்மிக்க?



(கொழும்பு)

தற்போதைய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்பதற்காக உருவாக்கப்படும் பொருளாதார அபிவிருத்திக் குழுவின் தலைவராக தம்மிக்க பெரேரா நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டின் பொருளாதாரத்தின் அனைத்து அம்சங்களையும் கண்காணித்தல் மேற்பார்வை செய்தல், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான கொள்கைகளை வகுத்தல் மற்றும் டொலர்களை ஈட்டுவதற்கான கொள்கைகளை வகுத்தல் போன்ற பல பொறுப்புகள் இந்த குழுவிற்கு வழங்கப்படவுள்ளது.

அத்துடன், அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு சமமாக பொருளாதார அபிவிருத்திக் குழுவின் தலைவருக்கும் அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது. (நி)

# கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் பழைய மாணவர் சங்க செயலாளரும், நிர்வாக சபை உறுப்பினருமான

**திரு. சி. ராஜ்குமார்**

அவர்கள்

திடீர் மரணம் அடைந்த செய்தி எம்மை துன்பக்கடலில் ஆழ்த்தியுள்ளது.

அவரை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

(A-4704)

# இராசிபலன்

05.08.2022
ஆடி 20, வெள்ளிக்கிழமை
அட்டமி முன்னிரவு 11.55 மணிவரை

சுவாதி பிற்பகல் 3.41 மணிவரை
சுப நேரம் -6.04-7.34 மணிவரை
இராகு காலம் -10.34-12.04 மணிவரை

வரலட்சுமி விரதம்,சுந்தர மூர்த்திநாயனார் குருபூசை
சந்திராஷ்டமம்-உத்திரட்டாதி, ரேவதி

வளவன்



**மேஷம்** — தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், காரிய அனுகூலமுண்டு,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



**கடகம்** — பெற்றோர் மீதான பாசம் கூடும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், நம்பிக்கைகள் நடைபெற கணபதியை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.



**துலாம்** — சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரலாம்,போசன சுகமுண்டு, சுற்பனை மிகுதியான நாள்.



**மகரம்** — பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கனவுகள் நனவாக அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.



**ரிஷபம்** — வழிபாட்டால் சிறப்பினைக் காணும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.



**சிம்மம்** — உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.



**விருச்சிகம்** — காரியங்களில் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.



**கும்பம்** — ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப்பெறுவீர்கள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



**மிதுனம்** — வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், வாகன சுகமுண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.



**கன்னி** — உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வாக்கு மேன்மையுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.



**தனுசு** — பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.



**மீனம்** — குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், திருடர் பயமுண்டு.

பெரிது கண்ணியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## கோபமும் மறதியும்



மாலையில் தான் கோபாலன் திரும்பி வந்தான். அவன் கண்களில் கோமதி எழுதி வைத்துப் போன கடிதம் தென்பட்டது. அவன் அதை எடுத்துப் படித்தான்.

அதில் அவள் தான் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக எழுதி இருப்பது கண்டு பயந்து போனான். ஊரெங்கும் அலைந்து திரிந்தான். குளம், குட்டைகளில் பார்த்தான். எங்கும் கோமதியைக் காணவில்லை.

இது பற்றி தன் மாமனாரிடம் உடனே தெரிவிக்க வேண்டும் என நினைத்து அவன் அவர் இருக்கும் அடுத்த ஊருக்கு ஓடினான். அவர் தம் வீட்டு வாசலில் உட்கார்ந்திருப்பது கண்டு கோமதி எழுதிய கடித்தைக் கொடுத்தான்.

அவனுடைய மாமனார் அக்கடிதத்தைப் படித்துவிட்டு "இந்தக் கடிதத்தின் படி கோமதி தற்கொலை செய்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவளோ உள்ளே இருக்கிறாளே. போய்ப் பாருங்கள்" என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

அப்போது கோமதியே வாசலுக்கு வந்து விட்டாள். அப்போது தன் கணவனையும் தன் தந்தையின் கையிலிருந்த கடிதத்தையும் அவள் பார்த்தாள். சட்டென அவரிடமிருந்து அக்கடிதத்தை பிடுங்கி "இதென்னப்பா கடிதம்?" என்று கேட்டு அதனை அவள் படித்தாள்.

பிறகு அவள் கடகட வென்று சிரித்து "அட்டா! எனக்குத்தான் என்ன ஞாபக மறதி! இக்கடிதத்தை எழுதி வைத்து விட்டு வீட்டை விட்டு வெளியே வந்ததும் அந்த விஷயத்தையே மறந்து விட்டேன் நேராக இங்கே வந்து விட்டேன் பரவாயில்லை.

இந்தக் கோபக்காரருடன் நான் வாழ முடியாது. இப்போதே தற்கொலை செய்து கொள்கிறேன்" என்று கொல்லைப்புறமுள்ள கிணற்றை நோக்கி ஓடினாள்.

சட்டென கோபாலன் ஓடி அவளைத் தடுத்து "கோமதி! என் கோபம் உன்னை தற்கொலைவரைக் கொண்டு போனதென்றால் உன் ஞாபக மறதி உன் உயிரைக் காத்தது. என் கோபம் இப்படிச் செய்யும் என்று நினைக்கவில்லை. இனி மேல் நான் கோபம் கொள்ள மாட்டேன். வா வீட்டிற்குப் போகலாம்" என்றான்.

கோமதியும் "என் ஞாபக மறதிதான் உங்கள் கோபத்தை அதிகரித்தது. இது எனக்கு ஒரு வியாதியோ என்னவோ! இதற்கு வைத்தியரைப் பார்த்து மருந்து வாங்கிக் கொள்கிறேன்" என்றாள்.

அப்போது கோபாலனின் மாமனார் "நீங்கள் ஒருவரை ஒருவர் நன்கு புரிந் கொண்டீர்கள்.

இப்படித்தான் இருக்க வேண்டும். இனி மேல் உங்கள் வாழ்க்கையில் பிரச்சினைகள் எழாது" என்றார். கோபாலனும் கோமதியும் சிரித்துக் கொண்டே தலை குனிந்து நின்றனர்.

(முற்றும்)

# சிலப்பதிகாரம்

## கானல் வரிகள்




அந்த வண்டி கண்ணகியின் வீட்டைக் கடந்த போது கண்ணகி சாளரத்தின் வழியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய பார்வையும் மாதவியின் பார்வையும் ஒரு விநாடி சந்தித்தன.

அப்போது கண்ணகியின் இடக்கண் துடித்தது. மாதவியின் வலக்கண் துடித்தது.

இடக்கண் துடிப்பது நல்ல சகுணம். வலக்கண் துடிப்பது கெட்ட சகுனம். இந்த நம்பிக்கையை அப்போது அவர்கள் இருவருமே அறிந்திருக்கவில்லை.

கடற்கரைச் சோலையில் கோவலன், மாதவி, வசந்த மாலை மூவரும் மணலில் அமர்ந்தார்கள்.

அடங்கிய அலைகளின் சத்தம், ஈரக்காற்று, இந்தச் சோலையின் நறுமணம் எல்லாம் மனத்துக்கு எவ்வளவு சந்தோஷம் தருவதாக இருக்கிறது!" என்று மாதவி வியந்தாள். தொடர்ந்து கோவலனின் முக பாவத்தைப் பார்த்தாள்.

உண்மைதான் என்று உணர்வில்லாமல் ஆமோதித்தான் கோவலன். அவன் மனம் இன்னும் குழப்பத்திலேயே இருந்தது.

வீடாக இருந்தால் கோவலனைக் கட்டியணைத்து கிறக்கமான முத்தம் ஒன்றைக் கொடுத்து அவனை வசப்படுத்தியிப்பாள். ஆனால் இது பொது இடமாயிற்றே?

மனம் சஞ்சலப்படுகிற நேரங்களில், இசை தான் மருந்து. பாடுகிறவர் மனத்துக்கு வடிகாலாகவும், கேட்கிறவர் மனத்துக்குச் சந்தோஷமாகவும் இருக்கும்.

இந்த மனோதத்துவத்தை நன்றாக அறிந்தவள் மாதவி. கோவலனைப் பாடச் சொன்னால் அவன் மனதிலிருக்கும் குழப்பங்களும் வருத்தமும் வடிந்து விடும் என்று நினைத்தாள். நல்ல யோசனை, அதனால் கோவலன் குழப்பம் என்னவோ தெளியத் தான் செய்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்வானை சுற்றியுள்ள கடற்பரப்பில் போர்க்கப்பல்களை குவிக்கும் சீனா

## அமைதி சீர்குலையும் அபாயம்

(பீஜிங்)

**அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசியின் தாய்வான் பயணத்தால் கடும் சீற்றமடைந்துள்ள சீனா, இந்தப் பயணத்தைத் தொடர்ந்து தாய்வானைச் சுற்றியுள்ள கடற்பரப்பில் போர்க்கப்பல்களைக் குவித்து இராணுவப் பயிற்சிகளுக்குத் தயாராகி வருகிறது.**



சீனா தனது நாட்டின் ஒரு பகுதி எனக் கருதும் தாய்வானுக்கான சர்ச்சைக்குரிய பயணத்தை முடித்துக்கொண்டு பெலோசி நேற்று முன்தினம் புதன்கிழமை புறப்பட்டார்.

பெலோசியின் பயணத்துக்கு பதிலடியாக, தாய்வானைச் சுற்றியுள்ள கடற்பரப்பில் போர்க்கப்பல்களைக் குவித்துள்ள சீனா, அங்கு 5 நாட்கள் தீவிர போர்ப்பயிற்சியை ஆரம்பித்தது.

இந்தப் போர்ப்பயிற்சிகள் பரபரப்பான சர்வதேச நீர்வழிப் பாதைகளில் நடைபெறும் என்று சீனா தெரிவித்துள்ளது. இந்நிலையில் சர்வதேசக் கப்பல்கள் மாற்று வழிகளை பயன்படுத்துமாறு தாய்வான் கோரிக்கை விடுத்துள்ளது.

தாய்வான் திட்டமிடப்பட்ட சீனாவின் இராணுவ அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருவதாக ஜனாதிபதி சாய் இங்-வென் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் பதற்றங்களை தணிக்கும் முயற்சியில் G7 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் ஈடுபட்டுள்ளனர். (நி)

# ரஷ்யாவுக்கு சீனா உதவக்கூடாது

## உக்ரைன் ஜனாதிபதி வலியுறுத்து

(கீவ்)

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா 5 மாதங்களுக்கும் மேலாக படையெடுப்பை நடத்தி வருகிறது.

இந்தப் போரில் அமெரிக்கா உட்பட உலகின் பல நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக நிற்கின்றன.

போரை கடுமையாக எதிர்க்கும் அந்த நாடுகள் ரஷ்யா மீது ஏராளமான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

அதேசமயம் சீனா, போர் தொடங்கிய நாள் முதல் ரஷ்யாவுக்கு எதிராக எந்தக் கருத்தும் தெரிவிக்காமல் இருந்து வருகிறது.

மாறாக ரஷ்யா மீதான பொருளாதார தடைகளை கடுமையாக எதிர்த்து வருகிறது.

இந்த நிலையில் உக்ரைன் மீதான போரில் ரஷ்யாவுக்கு சீனா, உதவக்கூடாது என உக்ரைன் நாட்டின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வலியுறுத்தி உள்ளார்.

"இப்போதைக்கு, சீனா உண்மையில் நடுநிலையாக உள்ளது, சீனா ரஷ்யாவுடன் இணைவதை விட இந்த நடுநிலை சிறந்தது எனத் தெரிவித்தார். (நி)

# ஒற்றைச்சாளரமேலாண்மை: வடக்கு மாகாணசபையின் பயிற்சி மற்றும் மேம்பாட்டு (Training & Development) பிரிவுகள்

ஒவ்வொரு அமைச்சு.பெரிய திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகளிலும் முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சிப் பிரிவை (MDTU) நிறுவுவதற்கு இலங்கை அரசாங்கம் வழங்கியதிலிருந்து வடக்கு மாகாணசபையின் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகு (MDTU), முகாமைத்துவ பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது. தங்கள் ஊழியர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நடத்துகின்ற ஏனைய மாகாண நிறுவனங்களும் உள்ளன.

அவ்வயாவன அரச ஊழியர்களுக்கான ஆங்கிலமூடான திறன்களை வழங்கும் நிறுவனம் (STEPSI) மும் மொழிக் கற்கைகள் நிலையம் (TLC), மாவட்ட வேளாண்மைப் பயிற்சி நிலை யங்கள் (DATCs), கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத்தின் பிராந்திய கால் நடைமேம்பாட்டுப் பயிற்சி நிலையங்கள் (RLTCs), மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப நிலையம் (PI CTEC), மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம் (PCTI), மாகாண சுகாதாரப் பயிற்சிநிலையம், இளைஞர் விவகாரப் பிரிவு மற்றும் அவர்களது சொந்த திணைக்கள ஊழியர்களுக்கான பயிற்சிகளை நடத்தும் இதர பிரிவுகளுமாகும்.

இந்த சேவை வழங்கல்களை மேற்பார்வையிடுவதன் முக்கியத்துவம் உணரப்பட்டுவந்ததன் காரணமாக, உத்தேசிக்கப்பட்ட இலக்குகளை இந் நிறுவனங்கள் அடைவதை உறுதி செய்வதற்காக, இந்த மனித வளதிறன் மேம்பாட்டு முயற்சிகளை மேற்பார்வையிட ஒற்றைச் சாளர மேலாண்மை ஒன்று தேவைப்பட்டது.

வடமாகாணஆளுநர் தனது மேற்பார்வையின் கீழ் ஒற்றைச் சாளரமுகாமைத்துவக் கட்டமைப்பை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தவும் சாத்தியமான இடங்களில் வருமானத்தை ஈட்டவும் பணித்துள்ளார்.

இதன் தொடர் நடவடிக்கையாக பிரதிப் பிரதம செயலாளர்ஆளணியும் பயிற்சியும் அவர்களின் தலைமையில் அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட முகாமைத்துவக் குழு 11 ஜூலை 2022 அன்று நிகழ் நிலையின் மூலம் முதல் கூட்டத்தை நடத்தியது. அனைத்து நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்று தங்கள் ஆணைகளையும் திட்டங்களையும் சமர்ப்பித்தனர். பயிற்சி நிறுவனங்கள் அவற்றின் தங்கும் விடுதிகள் மற்றும் அரங்குகளுக்கான வாடகைத் தொகையைத் தவிர, குறிப்பிடத்தக்க அளவு வருவாயில் கவனம் செலுத்தாமல், முற்றிலும் சேவை சார்ந்து திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்திவருகின்றன.

மாவட்டவேளாண்மைப் பயிற்சி நிறுவனங்கள் விவசாய சமூகங்களுக்கு அறிவுரை வழங்குவதன் மூலம்,தங்கள் விதைப் பொருட்கள் மற்றும் தாவர பதியங்களை/கன்றுகளை விற்பனை செய்வதன் மூலம் ஓரளவு வருமானம் ஈட்டுகின்றனர். கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத்துறையின் RLTCs, கால்நடை வணிகங்களின் தொழில் முனைவோருக்கான, பொருத்தமான மற்றும் மேம்பட்ட அறிவை இலக்காகக் கொண்டு கட்டணம் அறவிடும் பயற்சிகளை நடத்தத் திட்டமிடுகின்றன.

மாகாண சுகாதாரப் பயிற்சி நிலையம், மருந்துக் கலைவையாளர்கள் முதல் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வரையிலான இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை ஊழியர்களுக்கான பயிற்சிகளில் மட்டும் கவனம் செலுத்துகிறது. இதற்கு மேலதிகமாக ஆரம்பநிலை ஊழியர்களுக்கான பயிற்சி வாய்ப்புகளையும் ஆராயுமாறு அறிவுறுத்தப்பட்[illegible]சின் கீழ் உள்ள [illegible] பிரிவு நவம்பர் 2020 முதல் அதன் வெளியக அணுகலை விஸ்தரிக்கத் தொடங்கியுள்ளது. இப்பிரிவு "மலட்டுத்தன்மை மற்றும் IVF ஆலோசனைகள்", "தொழில் வழிகாட்டுதல்" மற்றும் "பெண்களின் தற்காப்புக்கான கராத்தே"உள்ளிட்டஅறிவூட்டல் பயிற்சி களை நடத்திவருகிறது.தனியார் துறை யுடன் இணைவதற்கானவாய்ப்புகள் மற்றும் நம்பிக்கைக்குரிய வேலை வாய்ப்பைக் கொண்ட பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கான வாய்ப்புகளை ஆராயுமாறு பிரிவின் பொறுப்பாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

MDTU, STEPSI, TLC மற்றும் PCTI ஆகியவை அந்தந்த நிறுவனங் களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணைகளின்படி பயிற்சிகளைத் திட்டமிட்டு நடத்தி வருகின்றன. இருப்பினும், அவர்கள் இந்த நெருக்கடியான நேரத்தில் பயிற்சிக ளைக் குறைக்க அல்லது கலப்பு (Hy brid) முறைகளைப் (நிகழ்நிலை + வகுப்பு முறை) பின்பற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. பாதீட்டுக் குறைப்பும் அவர்களுக்கு சவாலாகவே உள்ளது.

இந்தத் தருணத்தில், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள புகழ் பெற்ற நிறுவனங்களுடன் பல்வேறு ஒத்துழைப்பைப் பரிசோதித்து.அவற்றின் பலனாக தரப்படுத்திய பயிற்சி நெறிகளை நடத்தி வருவாய் ஈட்டுவது பற்றி அவர்கள் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

மேற்கூறப்பட்டவற்றின் நிமித்தம் ஒவ்வொரு ஐந்தாவது வாரத்திலும் அனைத்து நிறுவனங்களும் அவற்றின் செயற்பாடுகள் குறித்த அறிக்கையை மாகாண ஆளுநருக்கு பிரதிப் பிரதம செயலாளர் - ஆளணியும் பயிற்சியும் ஊடாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஒற்றைச்சாளர மேலாண்மைக் கட்ட[illegible] ஆங்கிலம் மற்றும் பிற வெளிநாட்டு மொழிகள்.ஆங்கில வழிக் கல்விக்கான ஆசிரியர் பயிற்சிகள், NVQ திட்டங்களை வழங்குதல், சமுதாயப் பராமரிப்பு சேவை வழங்குநர் பயிற்சிகள்.முன்பள்ளி ஆசிரியர்கள் பயிற்சிகள்.ஏற்கனவே உள்ள திறன்களை அங்கீகரித்தல் மற்றும் சான்றளித்தல் தொடர்பான நடவடிக்கைகள், 3,452 அபிவிருத்தி அலுவலர்களின் தரவு சேகரிப்பு, சேவை வழங்கல், பாதிப்பு மதிப்பீடு மற்றும் வீடுகளில் வசிப்பவர்களுக்கு மாகாண சேவைகளை வழங்குதல், கைவிடப்பட்ட பாடசாலைக் கட்டடங்களில் -தனியார் பொது பங்களிப்பு முறைமை ஊடாக சிறந்த பயிற்சிக்கான மூலமாகவும் வெளிநாடுகளில் உள்ள சிறப்புமையங்களுடனான இணைப்புகள் மூலமாகவும் சிறந்த பயிற்சி சேவைகளுக்கான மையத்தை உருவாக்குதல் ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்ல உறுதியான முனைப்புக்களைச் செய்ய வேண்டியுள் ளது. இவை அந்தந்த நிறுவனங்களில் உள்ள அர்ப்பணிப்பான மற்றும் உறுதியான பணியாளர்கள் மூலமாகவே ஏற்படுத்தப்பட்டு முகாமை செய்யப்படுதல் வேண்டும்.

மேலும்.இம் முகாமைத்துவக்குழுவிடம் பொது அதிகாரிகளின் "துறைசார் ஆராய்ச்சிகளுக்கு" உதவுவதை நோக்கமாகக் கொண்டு,தற்போது உயர் படிப்புகளை மேற்கொள்வதற்காக,அரசு அலுவலர்களுக்கு மனிதவள மேம்பாட்டுநிதி உதவிக்கான மேலாண்மைத் திட்ட த்தை விரிவுபடுத்தும் திட்டம் ஒன்றும் உள்ளது. இது நடத்தப்படும் பயிற்சிகளின் தாக்கங்களை அளவிடுவதற்கும் வருவாய் முயற்சிகளை உருவாக்குவதற்கும் உறுதியான தகவலை அளிக்கும் என்பது திண்ணம்.

**பிரதிப் பிரதமசெயலாளர்-**
**ஆளணியும் பயிற்சியும்,**
**கைதடி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரும் சீனக்கப்பலால் இந்தியாவுக்கு ஆபத்து உள்ளது

## தடுத்து நிறுத்துமாறு வைகோ கோரிக்கை

(சென்னை)

சீன உளவுக் கப்பலின் வருகையால் இந்தியாவுக்கு ஆபத்து உள்ளது என்றும் அதனை இலங்கைக்குள் நுழைய விடாமல் தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மதிமுக எம்.பி. வைகோ தெரிவித்துள்ளார்.



இந்நிலையில் நேற்று மாநிலங்களவையில் எம்.பி. வைகோ சீன உளவு கப்பல் குறித்து பேசினார். அப்போது, சீனாவுக்கு சொந்தமான யுவான் வாங்-5 என்ற உளவுக்கப்பல் இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஒரு வாரமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், சீன உளவுக் கப்பல் அனைத்து நிலைகளையும் செயற்கைக்கோள் உதவியுடன் உளவு பார்க்கும் திறன் கொண்டது என்றும் இந்தக் கப்பலால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது எனவும் தெரிவித்தார்.

சீனக் கப்பலை இலங்கை அரசு அனுமதிக்காமல் இருக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

கடந்த சில நாட்களுக்கு முன் சீனா தனது உளவு கப்பலான யுவான் வாங்-5 கப்பலை இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்த திட்டமிட்டிருப்பதாக பாமக நிறுவனர் ராமதாஸ் எச்சரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்களுக்கு திரிபோஷா வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

எதிர்வரும் சில வாரங்களில் குழந்தைகளுக்கு தேவையான திரிபோஷாவை உற்பத்தி செய்ய முடியும் என இலங்கை திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவித்துள்ளார்.



அத்துடன், தற்போது பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தேவையான திரிபோஷாவை இந்த வாரத்திற்குள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை திரிபோஷா நிறுவனம் அறிவித்துள்ளது. மேலும், சுகாதார மற்றும் மருத்துவ அதிகாரிகளின் அலுவலகங்கள் ஊடாக இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை, பாலூட்டும் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தேவையான சுமார் 720,000 திரிபோஷா பொதிகளை தற்போது தயாரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# ஜோசப் ஸ்டாலினின் கைதுக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டமைக்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கடந்த மே 9 ஆம் திகதி காலிமுகத்திடலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டமைக்காக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஒமிக்ரோன் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஒமிக்ரோன் திரிபுடன் அடையாளம் காணப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதன் காரணமாக மரண வீதமும் அதிகரித்துள்ளது.

எனவே மக்கள் வெளியில் செல்லும் போதும் பொதுப் போக்குவரத்தினை பயன்படுத்தும் போதும் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், மாணவர்களுக்கு நோய் அறிகுறிகள் காணப்படுமாயின் அவர்களை பாடசாலைக்கு அனுப்பாது, உரிய மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (நி)

# வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

மின்சாரம், எரிபொருள் விநியோகம், சுகாதாரம் உள்ளிட்டவற்றை அத்தியாவசிய சேவைகளாக பெயரிட்டு அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (நி)

# மின்சார அலகுகளின் பாவனை 20 வீதத்தால் வீழ்ச்சி

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தகவல்

(கொழும்பு)

நாட்டில் மின்சார அலகுகளின் பாவனை 20 வீதத்தினால் குறைவடைந்துள்ளது என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் மின் பாவனையாளர்கள் நாளொன்றுக்கு 48 மில்லியன் அலகுகள் மின்சாரத்தை பயன்படுத்தி வந்த போதிலும், தற்போது 38 மில்லியனாக குறைவடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல மாதங்களாக நிலவும் மின்வெட்டு மற்றும் நுகர்வோரின் குறைந்தளவான மின்பாவனையே இதற்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# மாணவர்களுக்கான கொரோனா தடுப்பூசிகளை துரிதமாக வழங்க தீர்மானம்-ஹேமந்த ஹேரத்

(கொழும்பு)

கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் மாணவர்களுக்கான கொரோனா தடுப்பூசிகளை துரிதமாக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மருத்துவ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அத்துடன், கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், சுகாதாரப் பழக்க வழக்கங்களை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)


# வேலை வாய்ப்பு

பொருத்தமான ஆளணி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு பொருத்தமானவர்களிடம் இருந்து (25-60 வயதுக்குட்பட்டவர்கள்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ★ முழுப்பெயர்
- ★ தபால் முகவரி
- ★ பால்
- ★ தே.அ.அ.இல
- ★ மொழித்தகைமை (சிங்களம், ஆங்கிலம்),
- ★ தொலைபேசி இலக்கம்
- ★ நிரந்தர முகவரி
- ★ பிறந்ததிகதி
- ★ விவாகநிலை
- ★ கல்வித்தகைமை
- ★ மேலதிக தகைமை/ அனுபவம்
- ★ மின்னஞ்சல் முகவரி

உள்ளிட்ட விடயங்கள் அடங்கலாக விண்ணப்பங்களை,

valampuriijaffna@gmail.com

என்ற மின்னஞ்சல் மூலமாக அல்லது,

வலம்புரி
இல. 3,2 ஆம் ஒழுங்கை
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ ஒப்படைக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 15.08.2022

பொதுமுகாமையாளர், வலம்புரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும்.

– எமர்சன்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் கொள்கைவிளக்கவுரையை நேற்று முன்தினம் (03) பாராளுமன்றத்தில் ஆற்றியுள்ளார்.

நாட்டு நிலைமைகளை வெளிப்படுத்துவதாக அவரின் உரை அமைந்துள்ளது.

அவர் ஆற்றிய உரையில், இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிப் பிரஸ்தாபித்திருப்பது முக்கிய விடயம் எனலாம்.

ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்று சிம்மாசன உரையை ஆற்றியபோது, இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

மாறாகத் தன்னை தடித்த பௌத்த சிங்கள தலைவனாக அடையாளப்படுத்தித் தனது உரையை அமைத்திருந்தார்.

அவரோடு ஒப்பிடுகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்கவுரை காத்திரமானதென்பதைக் கூறித்தானாக வேண்டும்.

அதேநேரம் கோட்டாபய ராஜபக்ஷ தன் பதவியை இராஜினாமாச் செய்தவிடத்து ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க மேற்போந்தவாறு உரையாற்றுவதுதான் புத்திசாலித்தனம் என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

எதுவாயினும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உரை யதார்த்தமானது.

அதேநேரம் இவ்வாறானதொரு உரை ஒரு சில சிங்களத் தலைவர்களால் முன்பும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தேர்தல் பிரசார உரைகளிலும் ஜனாதிபதியாகப் பதவியேற்ற சந்தர்ப்பத்திலும் இனப்பிரச்சினைக்கான தீர்வின் அவசியத்தை அவர் வலியுறுத்தியிருந்தார்.

அவ்வாறு அரசியல் தீர்வை வலியுறுத்திய சந்திரிகா குமாரதுங்க இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியிலும் அதீதமாக ஈடுபட்டார்.

எனினும் சந்திரிகா குமாரதுங்க கொண்டு வந்த தீர்வுத்திட்டத்தைப் பாராளுமன்றத்தில் வைத்து ரணில் விக்கிரமசிங்க தீயிட்டுக் கொளுத்தினார்.

இன்று அதே ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வு அவசியம் என்று கூறுகிறார் எனில், அரசியல் தீர்வு என்பது சமாளிப்புக்கான விடயமாக ஆகிவிட்டதோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது.

எதுஎவ்வாறாயினும் அரசியல் தீர்வு என்பதன் அவசியத்தை சிங்கள அரசியல்வாதிகளும் பௌத்த பிக்குகளும் ஒட்டுமொத்தச் சிங்கள மக்களும் உணராதவரையில் இலங்கை மீட்சிபெற முடியாததென்பதுதான் உண்மை.

ஆகவே வார்த்தைகளில் மட்டும் அரசியல் தீர்வை முன்வைக்காமல் அதனைச் செயலில் காட்டவேண்டும்.

அரசியல் தீர்வு என்று கூறி தமிழ் மக்களை ஏமாற்ற யார் நினைத்தாலும் அதன் விளைவு மிகப் பாரதூரமாக இருக்கும் என்பதும் கடந்த காலங்களில் அவ்வாறானதொரு ஏமாற்று நாடகம் அரங்கேற்றப்பட்டதனாலேயே இலங்கை இத்துணை பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ளதென்பதும் மனம் மெய் மொழிகளால் உணரப்பட வேண்டும்.

# நாட்டில் கடந்த 2 மாதங்களில் 20 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த மே மாதம் 30ஆம் திகதி முதல் நேற்று வரை 20 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பதிவாகியுள்ள துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் மொத்தம் 21 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ்.எஸ்.பி நிஹால் தல்துவா தெரிவித்தார்.

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளே பெரும்பாலான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் பின்னணியில் இருப்பதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக அவர் மேலும் கூறினார். (ம-7)

# இன்று ஒரு மணித்தியாலமே மின்வெட்டு அமுல்

நாட்டில் இன்றைய தினம் ஒரு மணித்தியாலம் மாத்திரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, A,B,C,D,E, F,G,H,I,J,K,L,P,Q,R,S,T, U,V,W ஆகிய வலயங்களில் இன்று இரவு நேரத்தில் மாத்திரம் ஒரு மணித்தியால மின்வெட்டு அமுலாகுமென அவ்வாணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள் பற்றாக்குறை, நீர் வளப்பற்றாக்குறை மற்றும் அனல் மின்நிலைய மின்பிறப்பாக்கி செயலிழப்பு போன்ற விளைவுகளால், போதிய மின் உற்பத்தியின்மை காரணமாக மின்சார விநியோகத்தை முகாமை செய்வதற்கு, மின்வெட்டை அமுல்படுத்த மின்சார சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

சில வாரங்களின் பின்னர் நீர் மின் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சிரேஷ்ட சட்டத்தரணி வேலாயுதன் தேவ சேனாதிபதி (LLB, கொழும்பு) என்பவரால் வடக்கு மாகாண க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.

அந்த வகையில் 10 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திலும் 11 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை தொழில்நுட்ப கல்லூரியிலும் 12 ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்திலும் (பெண்களுக்கு மட்டும்) 13 ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்திலும் (ஆண்களுக்கு மட்டும்) 14 ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இருபாலாருக்கும் 15 ஆம் திகதி காலை 8 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்திலும் 16 ஆம் திகதி காலை 8 மணிக்கு மாகாண தொழில்நுட்ப கல்லூரி மாங்குளத்திலும் 17 ஆம் திகதி காலை 8 மணிக்கு ஊற்றங்கரை விநாயகர் ஆலய மண்டபத்திலும் 18 ஆம் திகதி காலை 8 மணிக்கு மன்னார் நகரசபை மண்டபத்திலும் 19 ஆம் திகதி காலை 8 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்திலும் இக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

இதன்போது மாணவர்களுக்கு க.பொ.த. சா/த கடந்தகால வினாவிடை புத்தகமும் இலவசமாக வழங்கப்படும். (4)

# நல்லூர் முருகன் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றத்தினால் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் 4 ஆம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 முதல் 7.10 வரை வீணை இசை நடைபெறும். [illegible] வீணை [illegible] தி.பகிரதி, மிருதங்கம் க.நந்தகுமார், தி.சபரீசன், கடம் கு.ரவிசங்கர் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து 7.15 முதல் 8.05 வரை இசையரங்கு இடம்பெறவுள்ளது.

இதன்போது பாட்டு-ஜெயபாரதி கௌசிகன் வயலின்-ப.சியாம் கிருஷ்ணா, மிருதங்கம்-[illegible] ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (4)

# யோசப் ஸ்டாலினுக்கு 12 ஆம் திகதி வரை மறியல்

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் யோசப் ஸ்டாலினை ஒகஸ்ட் 12 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் யோசப் ஸ்டாலின் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டநிலையில் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# யாழ். இந்துக் கல்லூரியில் நாளை கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரிக்கு புதிதாக அனுமதி பெற்று தரம் ஆறில் கல்வி பயிலவரும் மாணவர்களை வரவேற்கும் முகமாக நடாத்தப்படும் கால்கோள் விழா நாளை சனிக்கிழமை (06.08. 2022) காலை 7.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெறும் என கல்லூரி அதிபர் இ.செந்தில்மாறன் தெரிவித்துள்ளார். (ம-7)

# ஹெரோயின், கஞ்சாவுடன் மன்னாரில் ஒருவர் கைது

ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் ஒருவர் மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படை மன்னார் முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் மன்னார் முகாம் அதிகாரிகள் குழுவினால் சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூர்வீதிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மன்னார் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரிடம் 4 கிராம் ஹெரோயின், 222 கிராம் கஞ்சா 100 கைப்பற்றப்பட்டன. (ம-7)

### நல்லூர் திருவிழாவில்

# திருட்டுக்களில் ஈடுபட வெளிமாவட்ட கும்பல்கள்

## பொலிஸார் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் தங்க ஆபரணம் அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள் எனவும், திருட்டுக்களில் ஈடுபட வெளிமாவட்ட கும்பல்கள் ஊடுருவி உள்ளதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்துள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உஜித் லியனகே தெரிவித்தார்

யாழில் நேற்று வியாழக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 1 ஆம் திகதியில் இருந்து நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகி இடம்பெறுகின்றது. ஆலய வளாகத்தில் தேவையான அளவு பாதுகாப்பு பொலிஸாரினால் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு விசேட பொலிஸ் அணியும் இங்கே வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

ஆனாலும், ஆலயத்திற்கு வருகின்ற பக்தர்கள் தங்க ஆபரணங்கள் அணிந்து ஆலயத்திற்கு வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் அதிக மக்கள் கூடும் இடத்தில் திருட்டுச் சம்பவங்களும் இடம்பெறலாம். இந்த திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்.

திருட்டுச் சம்பவங்களை மேற்கொள்வதற்கு வெளிமாவட்டங்களிலிருந்து ஒரு சிலர் குழுக்களாக ஊடுருவி இருக்கலாம். எனவே ஆலயத்திற்கு வருவோர் நகைகள் மற்றும் அதிக பணங்களை ஆலயத்திற்கு எடுத்து வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

அத்தோடு திருட்டுச் சம்பவங்கள், திருட்டு சந்தேக நபர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தால் பொலிஸாரிடம் உடனடியாக தெரியப்படுத்துங்கள் என தெரிவித்தார். (4-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகத்திடம் எரிபொருள் மீள கையளிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் இருந்து பொலிஸாரினால் எடுத்துச் செல்லப்பட்ட எரிபொருட்கள் மீளவும் பிரதேச செயலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, கடந்த 30 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினை சோதனையிட வேண்டும் என பொலிஸார் என்னிடம் அனுமதி கோரியிருந்தனர்.

மக்களுக்கு தெளிவுபடுத்தவும் மற்றும் வெளிப்படைத்தன்மையினை பேணுவதற்காகவும் பிரதேச செயலகத்தினை சோதனையிடுவதற்கு அனுமதி வழங்கி இருந்தேன்.

பிரதேச செயலகத்தினை சோதனையிட்ட பொலிஸார் அவசிய தேவைக்கு இருந்த எரிபொருளினை எடுத்துச் சென்றனர்.

குறித்த எரிபொருளினை நேற்று முன்தினம் பொலிஸார் பிரதேச செயலகத்திடம் மீள கையளித்துள்ளனர் எனவும் மாவட்டச் செயலாளர் தெரிவித்தார். (4-350)

# 'கோட்டாவை கைது செய்' யாழ்.நகரில் சுவரொட்டிகள்

(குப்பிழான்)

முன்னாள் ஜனாதிபதியும் தமிழ் இனப்படுகொலையாளியுமான கோட்டாபயவை சிங்கப்பூர் அரசு கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தித் தமிழ்த்தேசியப் பண்பாட்டுப் பேரவையால் யாழ்.நகர் எங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

"இனப்படுகொலையாளி கோட்டாவைக் கைது செய்" எனக் குறிப்பிடப்பட்டு தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (4-18)




# மன்.பேருந்து தரிப்பிடங்கள் மீள் புனரமைக்க நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் நகரசபையின் கீழ் காணப்படும் பேருந்து தரிப்பிடங்களின் பராமரிப்பு தொடர்பில் நேற்று புதன்கிழமை மன்னார் நகரசபை தவிசாளர் மற்றும் நகரசபை உறுப்பினர்களால் இணைந்து விசேட கள விஜய செயற்பாடு ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் நீண்டகால அபிவிருத்தி இன்றி காணப்படும் பேருந்து நிலையங்கள் மற்றும் மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படும் பேருந்து தரிப்பிடங்கள் புனரமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் துப்புரவு செய்யும் நடவடிக்கையும் மன்னார் நகரசபை ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்டது.

அதேநேரம், மன்னார் பேருந்து நிலையத்திற்கு பின்புறம் உள்ள கடைத்தொகுதிகள் உரிய சுத்தப்படுத்தல் இன்றி நீண்டகாலமாக காணப்படுவதாக மன்னார் நகரசபை செயளாளருக்கு முறைப்பாடுகள் மக்களால் வழங்கப்பட்ட நிலையில் கடைத்தொகுதிகள் முழுமையாக சுத்தப்படுத்தும் பணியும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(4-285)

# ஆலய திருப்பணிச் சபை அங்குரார்ப்பணம்



(யாழ்ப்பாணம்)

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவிலின் திருப்பணிச் சபையின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 2 ஆம் திகதி ஆலயக் கொடியேற்றத் திருவிழாவின் நிறைவில் இடம்பெற்றது.

திருப்பணிச் சபை உறுப்பினரும் பாடசாலை அதிபருமாகிய தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆலய முகாமையாளர் சி.இராமலிங்கம் முன்னிலை வகித்தார்.

ஆலய மஹோற்சவ குரு சிவஸ்ரீ சி. கிருபாகரக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். செந்தமிழ்சொல்லருவி ச. லலீசன் ஆலயத்தின் தொன்மை மற்றும் பெருமைகள் குறித்துச் சிறப்புரை ஆற்றினார். சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ.கயிலாயபிள்ளை நிறைவுரையாற்றினார்.

ஆலயத்தின் உள்வீதிக் கொட்டகை மற்றும் நிலம் என்பவற்றைப் புனரமைக்கும் திருப்பணி வேலைகள் இடம்பெறவுள்ளன. இதற்கு முதற்கட்டமாக ஆலய அடியவர்கள் ஆலய முகாமையாளரிடம் சம்பிரதாயபூர்வமாகத் தமது திருப்பணிசார் பங்களிப்புகளை வழங்கினர். (4)

# வர்த்தகர்கள் மூவருக்கு தலா 1 இலட்சம் தண்டம்

(கொழும்பு)

யாழில் அரிசியின் நிர்ணய விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த இரு வர்த்தகர்களும் , சமையல் எரிவாயு சிலிண்டரை பதுக்கி வைத்திருந்த வர்த்தகர் ஒருவரும் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையை அடுத்து மூவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகாரசபையினருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனைகளை நடத்தி , அரிசியை நிர்ணய விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த இரு வர்த்தகர்கள் மற்றும் எரிவாயு சிலிண்டரை பாவனையாளருக்கு வழங்காது பதுக்கி வைத்திருந்த வர்த்தகர் ஒருவர் என மூவருக்கு எதிராக தனித்தனியாக நீதிமன்றில் வழங்கு தாக்கல் செய்தனர்.

குறித்த வழக்கு விசாரணைகளின் போது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டமையை அடுத்து மூவருக்கும் நீதிமன்று தலா ஒரு இலட்சம் ரூபாய் தண்டம் அறவிட்டுள்ளது. (4-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 220 | 220 | 240 | 250 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 220 | 250 |
| பச்சைமிளகாய் | 450 | 350 | 500 | 450 |
| தக்காளி | 400 | 350 | 400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 250 | 300 | 150 |
| கோவா | 140 | 320 | 400 | 350 |
| கரட் | 300 | 300 | 380 | 400 |
| பூசணி | 130 | 150 | 120 | 150 |
| புடோல் | 100 | 100 | 160 | 200 |
| வாழைக்காய் | 140 | 100 | 160 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 220 | 200 |
| பாகற்காய் | 300 | 250 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 200 | 250 |
| பயற்றங்காய் | 200 | 180 | 200 | 300 |
| லீக்ஸ் | 280 | 250 | 260 | 300 |
| பீற்றூட் | 120 | 200 | 160 | 150 |
| கறிமிளகாய் | 600 | 350 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 450 | 450 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 160 | 240 |
| கீரை - 1 பிடி | 160 | 80 | 100 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 350 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 75 | 50 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 240 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 140 | 100 | 120 | 200 |
| பொன்னாங்கண்ணி | 80 | 90 | 50 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 160 | 80 | 100 | 150 |


# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட யாழ்ப்பாணம் வட்டாரம்-22 காரைக்காட்டு 2ம் ஒழுங்கை ஆதன இல.13/1 ஐக் கொண்ட ஆதனம் T.இரத்தினசபாபதி பெண் நாகேஸ்வரி என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு சி.விஸ்வலிங்கம் முகதாவில் 13.01.2004ம் திகதியிடப்பட்ட 1022ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் சோமசுந்தரம் கைம்பெண் லட்சுமி இவ் ஆதனம் தானும் தனது பெற்றோரும் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான உறுதிப்படியும் பிசகு தடையற்ற ஆட்சிப்படியும் சொந்தக்காரராக இருந்து வருகிறோம் என வெளிப்படுத்தியுள்ளார்.

ஆதன இடாப்பு:- வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை "முடவேம்படி" நிலப்பரப்பு இரண்டு குழி ஏழு தசம் நான்கு ஏழும் (நில பரப்பு 2 குளி 7.47) உம் வீடும் கிணறும்

கிழக்கு:- காராளசிங்கத்திற்கும் பெண் இராஜேஸ்வரிக்கும்
வடக்கு:- ஒழுங்கை
மேற்கு:- ஒழுங்கை
தெற்கு:- சிவஞானத்திற்கும் பெண் சுசிலாவுக்கும் உரிய ஆதனம்

தற்போது இவ்வாதனம் சோமசுந்தரம் கைம்பெண் லட்சுமி என்பவரால் தனது பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சோமசுந்தரம் கைம்பெண் லட்சுமி என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(E-4783)


# மோ.சைக்கிள் கண்டெடுப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் உரிமையாளர் இன்றி கண்டெடுக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று கிளிநொச்சி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

NP BAJ 4308 என்ற இலக்கத்தகடு பொருத்தப்பட்ட குறித்த மோட்டார் சைக்கிளை உரிய ஆதாரங்களை காட்டி நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு அமைவாக நீதிமன்ற பதிவாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என கிளிநொச்சி நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (4-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பாக...

குறியீட்டை மற்றையவர்களுக்குத் தெரியும்படியான இடத்தில் காட்சிப் படுத்த வேண்டாம் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கோரியுள்ளார்.

வேறு எவரும் சட்டவிரோதமாக அதைப் பயன்படுத்தாமல் இருப்பதை உறுதிசெய்ய, அதனை பாதுகாப்பான இடத்தில் வைக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

அத்துடன், தற்போதைய சுயவிவர அம்சத்தை (profile feature) நீக்குவதற்கான தெரிவும் மீண்டும் பதிவு செய்வதற்கான தெரிவும் தற்போது கிடைப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிபொருள் பெறுவதற்காக போலியான QR குறியீட்டைப் பயன்படுத்துவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## யாழில் நாயை...

நாயை வெட்டிக் கொல்லும்போது, குறித்த நபர்கள் தாமே அதை வீடியோவாக எடுத்து, சமூகவலைத்தளங்களில் பதிவிட்டுள்ள நிலையில், சந்தேக நபர்களான மூவரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் தீவிரமாகத் தேடி வந்தனர்.

இந்த நிலையில் மூன்று சந்தேக நபர்களில் இருவரை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

நாயை வெட்டிக் கொல்வதற்கு காரணமாக இருந்த பிரதான சந்தேக நபர் தப்பி ஓடியுள்ளார்.

அத்துடன் சந்தேநபர்கள் கஞ்சா போதைப்பொருள் பயன்படுத்திவிட்டு நாயை கொடூரமாக வெட்டிக் கொன்றதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது. (ம-7,33)

## இலங்கையின்...

அமெரிக்கா, இந்தியா உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் நிலவும் நிலைமை குறித்து அமெரிக்காவும் இந்தியாவும் உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடன் அமெரிக்க இராஜாங்கச் செயலர் அன்ரனி பிளிங்கன் இலங்கையின் நிலைமை குறித்து கலந்துரையாடினார்.

ஜெய்சங்கருடனான சந்திப்பின்போது உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பின் தாக்கங்கள் மற்றும் இலங்கையின் பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து விவாதித்ததாக பிளிங்கன் டுவிட் செய்துள்ளார்.

இதற்கிடையில் பிளிங்கன் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த சந்திப்பில் இலங்கை சவால் மற்றும் நெருக்கடியான தருணத்தில் இருப்பதாகவும் ஆனால் இன்னும் ஜனநாயகம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் பிளிங்கன் கூறியுள்ளார். (ம-7)

## அத்தியாவசிய...

மொத்த விலை 270 ரூபாயாகவும் ரூ.215 ஆக இருந்த உருளைக்கிழங்கின் மொத்த விலை ரூ.150 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

600 ரூபாயாக இருந்த வெங்காயத்தின் மொத்த விலை 420 ரூபாயாகவும் 1900 ரூபாயாக இருந்த மிளகாய் விலை 1300 ஆகவும் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

டொலரின் ஸ்திரத்தன்மை மற்றும் வங்கிகள் டொலர்களை வழங்குவதால் அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## தனியார்...

ளிரவு முதல் நாடு முழுவதும் தனியார் பேருந்துகள் சேவைகளில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சில பேருந்து சங்கங்கள் சேவையில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் அன்ஜன பிரியன்ஜின் தெரிவித்துள்ளார்.

QR முறையின் மூலம் வாரத்திற்கு ஒரு பேருந்துக்கு 40 லீற்றர் டீசல் மாத்திரம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. 40 லீற்றர் டீசலைப் பயன்படுத்தி தூர இடங்களுக்கு பயணிக்கும் பேருந்துகள் சில கிலோ மீற்றர் தூரம் வரை கூட செல்ல முடியாது.

குறுகிய தூரம் பயணிக்கும் பேருந்துகளுக்கு ஒரு மணி நேரத்திற்கு இந்த எரிபொருள் போதுமானதாக இருக்கும். தென் மாகாணத்தை சேர்ந்த சகல தனியார் பேருந்து உரிமையாளர்களும் சேவையில் இருந்து விலகியுள்ளனர்.

இதனால், நள்ளிரவு முதல் சேவைகளில் இருந்து விலக சில பேருந்து சங்கங்கள் தீர்மானித்துள்ளன எனவும் அன்ஜன பிரியன்ஜின் கூறியுள்ளார். (ம-7)

## பேருந்து கட்டண...

ஒரு லீற்றர் டீசலின் விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டதன் பயனை பயணிகளான மக்களுக்கு வழங்குவதற்காக பேருந்து கட்டணங்கள் குறைக்கப்படுவதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் கலாநிதி நிலான் மிரேண்டா தெரிவித்துள்ளார்.

11.14 வீதத்தால் பேருந்து கட்டணம் குறைக்கப்படுவதோடு குறைந்தபட்ச பேருந்து கட்டணத்தின் விலை 34 ரூபாயாகும். (ம-7)

## ஆத்திரமூட்டல்...

ரமசிங்கவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த சீனத் தூதுவர், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடினார்.

"ஒரே சீனா கொள்கை" தொடர்பில் இலங்கையின் கடைப்பிடிப்பு மற்றும் ஐக்கிய நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு பற்றிய சாசனக் கோட்பாடுகளுக்கான இலங்கையின் அர்ப்பணிப்பையும் ஜனாதிபதி விக்கிரமசிங்க, மீண்டும் வலியுறுத்தினார்.

இது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க டுவிட்டர் பதிவொன்றில், பிராந்திய ஒருமைப்பாடு தொடர்பான ஐக்கிய நாடுகளின் சாசனத்தின் கொள்கைகளுக்கு இலங்கையின்வலுவான அர்ப்பணிப்பை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய உலகளாவிய பதற்றங்களை மேலும் அதிகரிக்கும் ஆத்திரமூட்டல்களை நாடுகள் தவிர்க்க வேண்டும் என்றும் பரஸ்பர மரியாதை, நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாமை, அமைதியான ஒத்துழைப்பு மற்றும் மோதல்களை தவிர்த்தல் என்பன முக்கியம் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நாட்டைக்...

கட்சி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியபோதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

22ஆவது அரசியலமைப்பு திருத்த வரைபு தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பில் கலந்துரையாடி பொதுவான இணக்கப்பாட்டுக்கு வருவதே சிறந்தது எனவும் அதற்கு அனைவரினதும் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் இடைக்கால வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் அதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்க எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற துறைசார் கண்காணிப்புக் குழுக்களை உடனடியாக ஸ்தாபிக்க நடவடிக்கை எடுப்பதாகவும், அவற்றின் தலைவர்களுக்கு அலுவலக வசதிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டுக்கு அரச சேவையில் இருந்து அதி வினைத்திறன் வாய்ந்த சேவை தேவை என்றும் தெரிவித்தார். (ம-7)


































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கோட்டா கோ கம' வில் கூடாரங்களை அகற்றி கலைந்துசென்ற போராட்டக்காரர்கள்



கொழும்பு, காலிமுகத்திடல் "கோட்டா கோ கம" போராட்டப்பகுதியில் உள்ள போராட்டக்காரர்கள் கலைந்துசெல்வதற்கும் அங்குள்ள கூடாரங்கள் அகற்றப்படுவதற்கும் பொலிஸாரால் நேற்று மாலை 5 மணிவரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்த நிலையில் போராட்டக்காரர்களால் நேற்றைய தினம் அங்கிருந்த பெருமளவான கூடாரங்கள் அகற்றப்பட்டதுடன் போராட்டக்காரர்களும் அங்கிருந்து வெளியேறினர். (ம-7)

## சர்வகட்சி...

வில்லை.

அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய சபை, பாராளுமன்ற குழுக்களின் தலைமைப்பதவி உள்ளிட்ட சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கு இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி, சி.வி. விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, ரவூப் ஹக்கீமின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன இணக்கம் தெரிவித்துள்ளன. (ம-7)

## மக்களை...

கட்சிகளின் கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் (ம-7)


**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 2 இல் செவ்வாய் உள்ள 31 வயதான படித்த மணமகனுக்கு மணமகள் தேவை.
சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை.
(12352)

**077 117 6264**

**சமையல் ஆள் தேவை**

இந்திய உணவு வகைகள் (சைவ, அசைவ), நாண் ரொட்டி, சப்பாத்தி, தோசை வகைகள், கொத்து ரொட்டி செய்யக்கூடியவர் தேவை.
(12339)

**077 652 9583**

**காணி விற்பனைக்கு**

யாழ். நாவற்குழி சந்தியில் 57 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
(12311)

**076 490 5403, 076 491 2493, 076 490 6029**

**காணி விற்பனைக்கு**

58/1, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(பலாலி வீதி, திருநெல்வேலி கெற்றப்போல் சந்தியிலிருந்து பழம் வீதியில் சுமார் 200 m தூரம் அளவில்)
(C-4695)

தொலைபேசி:
**077 977 3732**

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ONLINE APPLICATIONS
- VISA APPOINTMENTS
- PASSPORT APPLICATION
- POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
(C-4659)

STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

**0777-068-777**

**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

**EXECUTIVE OFFICER**



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-4659)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777



**6ஆம் ஆண்டு 5ஆம் ஆண்டு**

**நினைவலைகள்**



| பிறப்பு 12.05.1939 | பிறப்பு 23.11.1950 |
|---|---|
| இறப்பு 10.08.2016 | இறப்பு 24.05.2017 |
| **வயிரமுத்து சிவலிங்கம்** ( ஓய்வுநிலை ஆசிரியர் ) | **சிவலிங்கம் கனகமணி** |
| திதி : அட்டமி | திதி : திரயோதசி |

ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஆறாது எம் துயரம்
ஆண்டாண்டு ஆனாலும்
நீங்காது உம் நினைவலைகள்....
(12355)

குப்பிளான் தெற்கு,
ஏழாலை.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



**மூன்றாம் ஆண்டு**

**நினைவுகளுடன்...**



**அமரர் கந்தப்பு கந்தசாமி**

(சாலை முகாமையாளர்- இ.போ.ச பருத்தித்துறை)

என்றென்றும் தங்களின்
நிழலில் வாழ்ந்த
நினைவுகளை சுமந்தபடி...

ஞானாசாரியார் வீதி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

(C-4706)

குடும்பத்தினர்



வட மாகாண மாணவர்களுக்காக
சிரேஷ்ட சட்டத்தரணி **வேலாயுதன் தேவசேனாதிபதி LLB**
கொழும்பு (அருள் கல்வி வட்டம்) G.C.E (O/L) க.பொ.த (சா/த) முற்றிலும்

**இலவசக் கருத்தரங்கு**

நேரசூசிகை

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 10.08.2022 புதன் | ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் | மு.ப 8.30 - பி.ப 3.00 |
| 11.08.2022 வியாழன் | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி | மு.ப 8.30 - பி.ப 3.00 |
| 12.08.2022 வெள்ளி | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (பெண்களுக்கு மட்டும்) | மு.ப 7.00 - பி.ப 3.00 |
| 13.08.2022 சனி | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (ஆண்களுக்கு மட்டும்) | மு.ப 7.00 - பி.ப 3.00 |
| 14.08.2022 ஞாயிறு | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (இருபாலாரும்) | மு.ப 7.00 - பி.ப 3.00 |
| 15.08.2022 திங்கள் | கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் | மு.ப 8.00 - பி.ப 3.00 |
| 16.08.2022 செவ்வாய் | மாகாண தொழில்நுட்பக் கல்லூரி, மாங்குளம் | மு.ப 8.00 - பி.ப 3.00 |
| 17.08.2022 புதன் | ஊற்றங்கரை விநாயகர் ஆலய மண்டபம் | மு.ப 8.00 - பி.ப 3.00 |
| 18.08.2022 வியாழன் | மன்னார் நகர சபை மண்டபம் | மு.ப 8.00 - பி.ப 3.00 |
| 19.08.2022 வெள்ளி | வவுனியா நகர சபை மண்டபம் | மு.ப 8.00 - பி.ப 3.00 |

- Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- G.C.E (O/L) கடந்த கால வினாவிடைத் தொகுப்புப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

"அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறவும்"
(C-4707)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org